# இன்று பொதுக்காலம் பத்தொன்பதாம் ஞாயிறு

திருவழிப்பாட்டு ஆண்டு A (10-08-2014)

## திருப்பலி முன்னுரை

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! நிறைவாழ்வை நமக்கு வழங்கி, நல்லதையே நமக்கு அருளும் ஆண்டவரின் சந்நிதானத்தில் ஒன்று கூடியுள்ளோம். நம் இறைத் தந்தையின் திருநாமத்தில் நல்வாழ்த்துக்கள் கூறி உங்கள் அனைவரையும்: இன்று பொதுக் காலம் பத்தொன்பதாம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு வரவேற்று நிற்கின்றோம்.*

*இன்றைய நாளில் இறைவாக்கினர் எலியாவும், திருத்தூதர் பவுலடியாரும் ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்டு இறைவனின் அழைப்பிற்கு பதில்கொடுத்த விதம் பற்றி நமக்கு எடுத்துக் கூறப்படுகின்றது. அத்தோடு 'துணிவோடிருங்கள் : நான்தான், அஞ்சாதீர்கள்:' என்னும் இயேசுவின் வார்த்தைகள் இறைவன் நம்மோடு எப்போதும் இருக்கின்றார் என்பதை உறுதிப்படுத்தி நிற்கின்றன. இவ்வேளையில் ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்பேன், ஆண்டவருக்காக ஆவலுடன் நான் காத்திருக்கின்றேன்: என் நெஞ்சம் காத்திருக்கின்றது: அவரது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருக்கின்றேன் என்னும் வார்த்தைகளை நம்முடைய வாழ்வின் வார்த்தைகளாக்கி அவர் வழியில் செல்ல வரம் கேட்டுத் தொடரும் பலியில் பங்கேற்போம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**நிறை வாழ்வை வாக்களிக்கும் அன்புத் தந்தையே இறைவா!**

எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், அனைவருக்காகவும் மன்றாடுகின்றோம்: ஆண்டவராம் இறைவன் நீர் உரைப்பதைக் கேட்டு, ஆண்டவராம் உமக்காக அவர்கள் ஆவலுடன்காத்திருந்து: உமது சொற்களுக்காக ஆவலுடன் காத்திருந்து. உமது வார்த்தைகளை தமது வாழ்வின் வார்த்தைகளாக்கி வாழ வேண்டிய சக்தியையும், ஆற்றலையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அன்பின் திருவுருவே இயேசுவே,**

நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என்னும் உமது கட்டளைக்காக இன்று நன்றி செலுத்துகிறோம். எங்களோடு வாழும் இல்லாதவர்களுக்கு உணவும், மாண்பும் வழங்கும் பொறுப்பை நீர் எங்களுக்கே தந்திருக்கிறீர். இந்தப் பொறுப்பை உணர்ந்து எங்களிடம் என்ன உள்ளதோ - செல்வம், ஆற்றல்கள், திறமைகள், நேரம் அதை உமது பாதங்களில் ஒப்புக்கொடுக்கும் தாராள மனத்தை எங்களுக்கு தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உமது வார்த்தையால் எம்மைக் குணப்படுத்தும் தந்தையே இறைவா!**

துன்பங்கள் எழுந்து எங்களை அழுத்துகின்ற வேளைகளில் எங்களைக் கைதூக்கி விடுபவர் நீரே என நாங்கள் உணர்ந்து வாழ்ந்திட அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**உம்மை நோக்கி மன்றாடும் அனைவருக்கும் பேரன்பு காட்டும். ஆண்டவரே,**

எம் வேண்டுதலுக்குச் செவிகொடும்: நாங்கள் ஒவ்வொருவரும் நீதி, நேர்மை, கனிவு, பொறுமை, தாழ்ச்சியுடையோராய் உமது வார்த்தையின்படி எமது வாழ்வைக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

***ஆண்டு முழுவதும் உமது நலத்தால் முடிசூட்டும் அன்புத் தந்தையே இறைவா!***

*அருள் மிகுந்தவரே: விரைவில் சினமுறாதவரே: பேரன்பும் உண்மையும் பெரிதும் கொண்டவரே. எம் இளைஞர்களைக் கண்ணோக்கி அவர்கள் மீது இரங்கும்: உம் அன்பின் ஆற்றலைத் அவர்களுக்குக் கொடும்: அவர்கள் எப்பொழுதும் மனிதநேயம் கொண்டவர்களாக இருக்க அவர்களுக்கு ஆசீர் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*